




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.8.2023) திருவாரூர் மாவட்டம், காட்டூரில் உள்ள கலைஞர் கோட்டத்தை பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன் ஆகியோர் உடனிருந்தனர்.

## முதல்வரை வியக்கிறேன்!



காலை உணவுத்திட்ட விரிவாக்கம் வரலாற்றில்
முதல்வர் பெயரை முன்னிறுத்தும்

ஒரே கல்லில்
இரண்டு மாங்காய்
கல்விப் புரட்சி;
உணவுப் புரட்சி!

சமூகங்களும்
ஊடகங்களும்
கொண்டாடுகின்றன!

இப்படி ஒரு நிதிச் சூழலில்
எப்படித்தான் நிறைவேற்றுகின்றாரோ!

முதல்வரை வியக்கிறேன்.



- கவிப்பேரரசு **வைரமுத்து**

## சோனியா காந்தி காஷ்மீர் பயணம்!

ஸ்ரீநகர், ஆக.27

ஜம்மு -காஷ்மீர் பயணம் மேற்கொண்டுள்ள சோனியா காந்தி ஸ்ரீநகரில் உள்ள ஏரியில் படகு பயணம் மேற்கொண்டார்.

காங்கிரஸ் மூத்த தலைவரான ராகுல்காந்தி லடாக் யூனியன் பிரதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அங்கு கார்கில் போரில் உயிரிழந்த வீரர்களின் நினைவிடத்திற்கு சென்று அஞ்சலி செலுத்தினார். அதேபோல், லடாக்கின் பாங்காங் ஏரி பகுதிக்கு சென்றார். மேலும், லடாக்கில் பல்வேறு பகுதிக்கு சென்று மக்களை சந்தித்தார். லடாக் பயணத்தை முடித்துக்கொண்டு ராகுல் காந்தி ஜம்முகாஷ்மீர் யூனியன் பிரதேசம் சென்றார். 2 நாள் பயணமாக ஜம்முகாஷ்மீரின் ஸ்ரீநகருக்கு ராகுல்காந்தி நேற்று சென்றார்.

லடாக்கின் கார்கில் இருந்து சாலை வழியாக காஷ்மீரின் கண்டர்பெல் மாவட்டத்திற்கு ராகுல்காந்தி சென்றார். அங்கு அவர் காங்கிரஸ் நிர்வாகிகளை சந்தித்தார். இந்நிலையில், காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தியும் காஷ்மீர் சென்றுள்ளார். அவர் ராகுல்காந்தியை ஸ்ரீநகரில் இன்று சந்திக்கிறார்.




நாகை மாவட்ட தி.மு.க. நேற்று, இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் மயிலாடுதுறையில் நேற்று நடைபெற்றது. சேலம் இளைஞர் அணி மாநாட்டினை எழுச்சியோடு நடத்துவதற்கான ஆலோசனைகளை இளைஞரணி நிர்வாகிகள் – உறுப்பினர்களுக்கு இளைஞர் அணிச்செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை வழங்கி உரையாற்றினார்.

### மாணவர்களின் காலை உணவுத் திட்டம்

# அறிவுசார் அடுத்த தலைமுறையை உருவாக்கிடும் அரிய திட்டம்!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் பாராட்டு!

சென்னை, ஆக.27-

மாணவர்களின் காலை உணவுத் திட்டம் அறிவுசார் அடுத்த தலைமுறையை உருவாக்கும் திட்டம் என்று விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள 31 ஆயிரம் அரசு பள்ளிகளில் படிக்கும் 17 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தி, தொடங்கி வைத்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வாழ்த்துகிறது. இந்த காலை உணவு திட்டம் என்பது அறிவு சார்ந்த அடுத்தத் தலைமுறையை உருவாக்கும் அரிய திட்டமாகும். இந்த திட்டம் இந்தியாவிற்கு மட்டுமல்ல உலகிற்கு வழிகாட்டக்கூடிய உன்னத திட்டமாகும். காலையில் பள்ளிக்கு செல்லும் குழந்தைகளில் பல பேர் காலை உணவை உட்கொள்ளாமலேயே பள்ளிக்கு வருகின்றனர். காலையில் வெறும் வயிற்றுடன் வரும் மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவதற்கான வாய்ப்பு குறைவு. வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பத்தை சேர்ந்தவர்கள் பெரும்பாலும் காலை உணவு என்பது டீ யோடு முடிவடைகிறது. ஓரளவு வருமானம் உள்ள நடுத்தர குடும்பத்தினரும் காலையில் வேலைக்கு செல்வதற்காக அவசர அவசரமாக கிளம்பி செல்வதால் காலை உணவை ஏற்பாடு செய்வதற்கான வாய்ப்பு மிகக்குறைவு. எனவே ஏழை எளிய நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த பெரும்பாலான மாணவர்கள் காலை உணவை எடுத்துக் கொள்ளாமலேயே பள்ளிக்கு வருகின்றனர்.

அதனால் வகுப்பறையில் சோர்வடையும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆசிரியர் நடத்தும் பாடத்தை முழுமையாக கவனிக்கக் கூடிய நிலையில்



அவர்களுடைய உடல் நிலையும் மனநிலையும் இல்லாமல் போகிறது. இதனை அறிந்த முதலமைச்சர் அவர்கள் காலை உணவு என்பது மாணவர்களின் கல்விக்கு மிக மிக முக்கியமான ஒன்றாகும் என்பதாலும், இளம் வயதில் ஒரு வேளை உணவை எடுத்துக் கொள்ளாமல் இருப்பது அவர்களின் எதிர்கால உடல் நலத்திற்கு ஏற்றதாக அமையாது என்பதாலும் தாய் உள்ளத்தோடு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். தற்போது அந்தத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தி உள்ளார்கள். தானே அந்தத் திட்டத்தை தொடங்கி வைத்து மாணவர்களோடு அமர்ந்து காலை உணவை சுவைத்த காட்சி ஒரு தாயின் உணர்வை அனைவருக்கும் ஏற்படுத்தியது.

எனவே காலை உணவு திட்டம் என்பது அடுத்த தலைமுறையை அறிவுசார் தலைமுறையாக ஆக்கக்கூடிய அற்புதத் திட்டம். அப்படிப்பட்ட திட்டத்தை அறிவித்தது மட்டுமின்றி அதனை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ள தமிழ்நாடு முதலமைச்சரை மனமார பாராட்டுகிறோம். அனைத்துத் திட்டங்களிலும் இந்தியாவிற்கு முன்னோடியாக விளங்கும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள், இந்தத் திட்டத்திலும் இந்தியாவிற்கு மட்டுமல்ல உலகிற்கு முன்மாதிரியாக திகழ்கிறார். அவர் பணி தொடர விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வாழ்த்தி அவர் பின்னால் பக்கபலமாக நிற்கும். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.